# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 29 திங்கட்கிழமை 13.01.2025 கதிர் 95









## ரணில் – சஜித் இணைந்தாலும் அநுர அரசுக்குச் சவால் இல்லை

### அமைச்சர் நளிந்த கூறுகின்றார்

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன இணைந்து களமிறங்கினால்கூட ஆளும் கட்சிக்குச் சவால் இல்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரைச் சங்கமிக்க வைப்பதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே

7 ➤

## அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் பொதுவான நிலைப்பாட்டை எடுக்க

# தமிழ்த் தலைவர்கள் சகலரும் ஓரணியில் சங்கமிக்க வேண்டும்

### இப்படி அநுர அரசு வலியுறுத்து

**"தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் பொதுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அதற்காக முதலில் அவர்கள் அனைவரும் ஓரணியில் இணைய வேண்டும். அதைவிடுத்து அவர்கள் வெளியில் இருந்துகொண்டு அரசை விமர்சிப்பதால் எந்தப் பயனும் இல்லை." – என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு நிலைப்பாடுகளுடன் இருக்கின்றார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகளான அவர்கள் அனைவரும் ஓரணியில் இணைந்து தீர்வு விடயம் தொடர்பில் பொதுவான நிலைப்பாட்டைத் தெரிவித்தால் அது தொடர்பில்

7 ➤

## கண்டியில் கடத்தப்பட்ட மாணவி அம்பாறையில் மீட்பு



கண்டி, கெலிஓயா - அம்பரப்பொல பகுதியில் கடத்தப்பட்ட முஸ்லிம் பாடசாலை மாணவி அம்பாறை பொலிஸாரினால் இன்று முற்பகல் 10 மணியளவில் மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாறை பிரதான பஸ் நிலையத்தில் வைத்து மாணவி உட்பட அவரைக் கடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபர் கைது செய்யப்பட்டு அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

மேற்படி மாணவி கறுப்பு நிற வானில் கடத்தப்பட்டிருந்தார். இதனையடுத்து வாகனம் பொலனறுவை பகுதியில் மீட்கப்பட்டிருந்தது. சாரதியும் கைது செய்யப்பட்டிருந்தார்.

எனினும், கடத்திய நபர் மாயமாகி இருந்தார். அவரைக் கண்டுபிடிப்பதற்காக மூன்று விசேட பொலிஸ் குழுக்கள்

7 ➤

## ஜனாதிபதி இன்று சீனாவுக்கு விஜயம்



சீனாவுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று மாலை நாட்டிலிருந்து பயணமாகின்றார்

சீன ஜனாதிபதி ஜி ஜினபிங்கின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை (14) முதல் 17 ஆம் திகதி

7 ➤

### தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி

## திருமலையில் இன்று கையெழுத்து வேட்டை



பல வருடங்களாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தும் கையெழுத்துப் போராட்டம் திருகோணமலை சிவன்கோயிலடிக்கு முன்னால் இன்று நடைபெற்றது.

இந்தக் கையெழுத்து வேட்டையானது போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பலர் கலந்து கொண்டு கையெழுத்துக்களை இட்டனர்.

7 ➤

### சாவகச்சேரிப் பகுதியில்

## போதை மாத்திரைகளுடன் இரு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், சாவகச்சேரிப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

7 ➤

# தொண்டமனாறு கடற்கரையில் ட்ரோன் மூலம் வீடியோ




கொழும்பு, ஜன 13

வெளிநாட்டு பிரஜைகள் சிலர் தொண்டைமனாறு கடற்கரையில் நின்று ட்ரோன் மூலம் வீடியோ எடுக்கிறார்கள். அதே போல் முல்லைத்தீவில் றோகிஞ்சியா படகு கரையொதுங்கும் வரை கடற்படைக்குத் தெரியாது போயுள்ளது. இவ்வாறு வெளிநாட்டவர் எமது கடலில் என்ன செய்கிறார்கள் என்று அவதானிக்க முடியாதவர்கள் பிறகு கிளீன் சிறீலங்கா பற்றிப் பேசி பிரியோசனமில்லை என்று வடமராட்சி வடக்கு சமாசத்தின் உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பில் நா.வர்ணகுலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கடற்பரப்பில் இடம்பெறும் உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட மீனவர்களின் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும். இங்கிருக்கும் உள்ளூர் சங்கங்கள் ஏன் வெளி மாவட்ட மீனவர்களுக்கு ஒரு நடைமுறையையும் உள்ளூர் மீனவர்களுக்கு ஒரு நடைமுறையும் கொண்டுள்ளீர்கள்.

வெளி மாவட்ட மீனவர்கள், சட்டவிரோத தொழில் முறைகள் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களால் கடல்வளம் அழிக்கப்படுகிறது. நாசம் செய்யப்படுகிறது. கடல் பகுதிகளில் பிளாஸ்ரிக் கழிவுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு கடல்வளம் நாசமாகப்பட்டுள்ளது. இதைக் கிளீன் செய்யுங்கள் கிளீன் சிறீலங்கா என்றால் இதைக் கிளீன் செய்யுங்கள்.

கடந்த சில நாள்களுக்கு முன் வெளிநாட்டு பிரஜைகள் சிலர் தொண்டைமனாறு கடற்கரையில் நின்று ட்ரோன் மூலம் வீடியோ எடுக்கிறார்கள். அதே போல் முல்லைத்தீவில் றோகிஞ்சியா படகு கரையொதுங்கும் வரை கடற்படைக்குத் தெரியாது போயுள்ளது. இவ்வாறு வெளிநாட்டவர் எமது கடலில் என்ன செய்கிறார்கள் என்று அவதானிக்க முடியாதவர்கள் பிறகு கிளீன் சிறீலங்கா பற்றிப் பேசி பிரியோசனமில்லை என்றார். (ஐ)

# 3,500 இலங்கையர்களுக்கு சந்தர்ப்பம்



கொழும்பு, ஜன 13

இந்த வருடத்திற்கான புனித ஹஜ் யாத்திரைக்காக 3,500 இலங்கையர்களை அனுப்புவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

சவுதி அரேபியா - ஜெட்டாவில் உள்ள அசிலா விருந்தகத்தில் வைத்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகப் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த ஒப்பந்தத்தில் அந்த நாட்டின் ஹஜ் யாத்திரைக்கான பிரதியமைச்சர் அப்துல்ஃபட்டா பின் சுலைமான் மஷாட் (Abdulfattah bin Sulaiman Mashat) மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹனிதும சுனில் செனவி ஆகியோரினால் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இதன்போது, புனித ஹஜ் யாத்திரையில் ஈடுபடுபவர்களுக்கான வசதிகள் மற்றும் யாத்திரையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது (ஐ)

# கரையொதுங்கிய சிலை

கொழும்பு, ஜன 13

கண்ணன் ராதை ஆகிய இருவரும் இணைந்து ஜோடியாக இருக்கும் சிலை ஒன்று வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.

அண்மைக்காலமாக கால நிலையில் ஏற்பட்ட மாற்றங்களனால் கடல் சீற்றங்கள் சூறாவளி புயல்கள் தென்கிழக்கு ஆசியாவின் பல நாடுகளில் ஏற்பட்டது அதன்போது இந்தோனேசியா,மலேசியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது

குறித்த சிலையை பார்வையிடுவதற்காக அதிகளவான மக்கள் குவிந்துள்ளனர். (ஐ)

# கைதிகளுக்கு நாளை விசேட சலுகை

கொழும்பு, ஜன 13

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறைச்சாலைகளில் உள்ள இந்து மத கைதிகளை பார்வையிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைகளம் அறிக்கை ஒன்றின் ஊடாக தெரிவித்துள்ளது.

அதன்படி நாளைய தினம், சிறைச்சாலைகளில் உள்ள இந்து மத கைதிகளை பார்வையிட வரும் உறவினர்களால் கைதியொருவருக்கு தேவையான அளவு, உணவுப்பொருடகள் மற்றும் இனிப்புகளை எடுத்து வர முடியும் என சிறைச்சாலைகள் ஆணையாளரும் பேச்சாளருமான காமினி பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அனைத்து சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் சிறைக்கைதிகள் பார்வையிடும் விதிமுறைகளுக்கு அமைய நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார் (ஐ)

# வீட்டுத்திட்டங்களை மீள ஆரம்பிக்கத் தீர்மானம்



கொழும்பு, ஜன 13

இடைநடுவே கைவிடப்பட்டுள்ள 12 அரச வீட்டுத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபை, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட பல நிறுவனங்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டுத்திட்டங்களில் சுமார் 4000 வீடுகள் அமைந்துள்ளன.

சிக்கலுக்குள்ளான ஒப்பந்ததாரர்களுக்கு பதிலாக புதிய ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிலித்துள்ளார். (ஐ)



# தனிநபர் பாவனை வாகன இறக்குமதிக்கு இன்னும் அனுமதியில்லை

கொழும்பு, ஜன 13

சனிக்கிழமை இரவு நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆயத் தீர்வை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் (வர்த்தமானி அறிவித்தல் எண;.. GN 2418-43 dated 10/01/25), இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் என்ஜின் கொள்ளளவின் பிரகாரம் வரி அறவிடுவது தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

சாதாரணமாக இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் மீது நான்கு அம்சங்களில் வரி அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு அங்கமாக அலகு கட்டண வீதம் என்பது வாகனத்தின் என்ஜின் கொள்ளளவின் பிரகாரம் அறவிடப்படுவது, இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் பெறுமதியில் விசேட இறக்குமதி வரி, வாகன வகுப்பின் பிரகாரம் விசேட சொகுசு வரி மற்றும் மேற்படி சகல வரிகளும் அடங்கலான தொகை மற்றும் வாகனத்தின் ஊஜகு பெறுமதியின் மீது பெறுமதி சேர் வரி போன்றன அடங்கியிருக்கும்.

இவற்றுக்கு மேலதிகமாக, வாகனம் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர், சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி மற்றும் வருமான வரி, இறக்குமதி செய்யும் நிறுவனத்தின் இலாப பங்கு போன்றன இலங்கையில் வாகனமொன்றை கொள்வனவு செய்யும் நபருக்கு செலுத்த வேண்டியிருக்கும்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை வாகன இறக்குமதியாளர் சம்மேளனத்தின் செயலாளர் அரோஷ ரொட்ரிகோ தமிழ்மிரருக்கு கருத்துத் தெரிவிக்கையில், “வணிக மற்றும் தனிநபர் பாவனைக்குரிய வாகனங்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் திகதி தொடர்பில் தெளிவான அறிவித்தல் வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் சாதகமான பதில்களை வெளியிட்டிருந்த போதிலும், இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் இன்னமும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளவில்லை.”

“அத்துடன், இறக்குமதி செய்யப்படக்கூடிய வாகனங்களின் வயது தொடர்பில் தவறான சில கருத்துகள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுகின்றன. சனிக்கிழமை வெளியாகிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், தனிநபர் பாவனைக்கான கார்கள் இறக்குமதியின் போது, 3 வருடங்கள் வரை பழமையான வாகனங்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சில தரப்பினர், பத்து வருடங்கள் வரை பழமையான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்படும் என தவறான அர்த்தத்தை சேர்க்கின்றனர். குறித்த வர்த்தமானி அறிவித்தலின் பிர காரம், கொங்கிறீற் மிக்சர்கள் போன்ற விசேட வகையைச் சேர்ந்த வாகனங்கள் மாத்திரமே பத்து வருடங்களுக்கு உட்பட்டதாக இருந்தால் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிகப்படும்.” என்றார்.

உள்நாட்டில் காணப்படும் பயன்படுத்திய வாகனங்களின் பெறுமதிகளில் பெருமளவு தாக்கம் ஏற்படாத வகையில் புதிய வாகனங்கள் இறக்குமதியின் போது விலைகள் குறித்து கவனம் செலுத்தப்படும் என அண்மையில் தனியார் ஊடகமொன்றில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் வழங்கியிருந்த செவ்வியில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# “வெடிகுண்டு நாடகம் குறித்து நீதியான விசாரணை வேண்டும்”




கொழும்பு, ஜன 13

சரியாக மூன்று வருடங்களுக்கு முன்னர் பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் இடம்பெற்ற வெடிகுண்டு நாடகம் தொடர்பில் புதிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு இலங்கை கத்தோலிக்க திருச்சபை அரசாங்கத்தை இன்று வலியுறுத்தியுள்ளது.

ஜனவரி 11, 2022 அன்று தேவாலயத்திற்குள் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று காலை போராட்டம் நடத்தப்பட்டது. இது தொடர்பாக தேவாலயத்தின் பராமரிப்பாளர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். இந்தச் செயல்களால் அவர் துன்புறுத்தப்பட்டதாகவும், அவரது மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் திருச்சபை தெரிவிக்கிறது.

தேசிய கத்தோலிக்க தொடர்பு இயக்குனர் அருட்சகோதரர் ஜூட் கிரிசாந்த இந்த சம்பவம் தொடர்பில் புதிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, அரசாங்கம் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை திருச்சபை வலியுறுத்தவுள்ளதாக ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

கடந்த ஆட்சியின் போது சந்தேக நபர் ஒருவர் பிடிபட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த சந்தேக நபர் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க விரும்புகின்றோம். அரசாங்கம் இது தொடர்பில் ஆராய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்குரியதாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மாலையில் பதிவாகிய சிசிடிவி காணொளிகளை மாத்திரம் ஆராய்ந்தால் போதுமானது என தேசபந்து கூறினார். ஆனால் காலையில் பதிவு செய்யப்பட்ட மற்றொரு கிளிப்பில் தேவாலயத்திற்குள் வெடிகுண்டை வைப்பது பதிவாகியது” என குச. ஜூட் மேலும் கூறினார். (ஐ)

# மலையகத்தில் கரும்புக்கு தட்டுப்பாடு



கொழும்பு, ஜன 13

உலக வாழ் தமிழர்கள் நாளைய தினம். தைப் பொங்கலை கொண்டாட உள்ளனர். உழவர்கள் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகவே தைப்பொங்கல் விழாவாக கொண்டாடுகின்றனர்.

மலையக மக்களும் இத்தினத்தில் சூரிய பகவானுக்கு சூரிய பொங்கல் வைத்தல் ஆலயங்கள் மற்றும் வீடுகளில் விசேட பூஜைகள் நடத்தி வழிபாடுகளில் ஈடுபடுதல் சுப காரியங்களை நடத்துவது என பல்வேறு நிகழ்வுகளை இத்தினத்தில் முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகள் நடத்தும் போது கரும்பு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. பூஜை வழிபாடு செய்வதற்கு வீடுகள், ஆலயங்கள் மற்றும் வேலைத்தளங்கள் ஆகியவற்றை அலங்கரிப்பதற்கு இந்துக்கள் கரும்புகளை பயன்படுத்துகின்றனர்.

இருந்த போதிலும் கரும்பு தட்டுப்பாடு காரணமாக இவ்வாறான விடயங்களை முன்னெடுக்க முடியாத சூழ்நிலைக்கு மலையகத்தில் வாழும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வர்த்தகர்கள் கரும்புகளை வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு நகரங்களில் விற்பனை செய்கின்றனர்.

கரும்பு ஒரு ஜோடி 350 முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. உதாரணமாக ஒரு தோட்டத்தை எடுத்துக் கொண்டால் 300 வீடுகள் காணப்படுகிறது. ஒரு வீட்டுக்கு இரண்டு என்ற அடிப்படையில் கரும்புகள் கொள்வனவு செய்ய வேண்டும். கிட்டத்தட்ட 600 கரும்புகள் தேவைப்படுகின்றன. இவ்வாறு எடுத்துக் கொண்டால் இலட்சக்கணக்கான கரும்புகளை தைப் பொங்கல் காலங்களில் மலையக பிரதேசத்திற்கு தேவைப்படுகின்றன.

அதிக குடும்பங்களுக்கு கரும்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருப்பதில்லை. பொருளாதார சிக்கலுக்கு மத்தியில் தைப்பொங்கல் கொண்டாடும். மக்கள் கரும்பினை பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலைக்கு மத்தியில் உழவர் திருநாளாம் தைப்பொங்கல் கொண்டாடுகின்றனர். எதிர்காலத்தில் இவ்வாறான நிலை ஏற்படாமல் பெருந் தோட்டப் பகுதியில் கைவிடப்பட்டுள்ள தரிசு நிலங்களில் கரும்பு பயிர் செய்கையை முன்னெடுப்பதற்கு.

அரசாங்க ஒரு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான திட்டத்தை முன்னெடுக்கும் போது அதிகமானோருக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும். அத்தோடு கரும்பு ஏற்றுமதியும் மலையகத்திலிருந்து.செய்ய முடியும் எனவே இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு பல்வேறு தரப்பினரும் முன்வருவது காலத்தின் கட்டாயமாகும். (ஐ)

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுடன் சந்திப்பு







கொழும்பு, ஜன 13

இலங்கை கடற்தொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருமான, ராமலிங்கம் சந்திரசேகர், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் குழு அலுவலகத்திற்கு வருகை தந்து கட்சி தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், பொன்னாடை அணிவித்து, நூல்களை வழங்கி வரவேற்றார். அமைச்சர், பிரதியமைச்சர் இருவரும் மலையக பகுதியை சேர்ந்தவர்கள் என்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர்களுடன் நடைபெற்ற உரையாடலில் மத்தியக்குழு உறுப்பினர் உ.வாசுகி, மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் க.கனகராஜ், எஸ். கண்ணன், மாநிலக்குழு உறுப்பினர் இரா.சிந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இலங்கையில் புதிதாக அமைந்துள்ள இலங்கை அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்து தெரிவித்தேதாடு, தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் போது முன்னெழும் பிரச்சனைகள் குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. இலங்கை தோட்டத் தொழிலாளர்களின் வாழ் விட, வாழ்வாதாரப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பது முன்வைக்கப்பட்டது. தமிழ் நாட்டு முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்களின் கடவுச்சீட்டு வழங்க வேண்டும். குறிப்பாக, கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாகாணத் தேர்தல் நடத்துவது பற்றியும், தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவது பற்றியும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் எனக் கோரப்பட்டது.

இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தமிழர் இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மை இன மக்களின் பிரச்சனைகளில் உறுதியாக கவனம் செலுத்தும், மக்கள் தங்கள் மீது அதன் காரணமாகவே நம்பிக்கை வைத்துள்ளனர் என்று அமைச்சர்கள் தெரிவித்தனர். பரஸ்பர உறவு தொடர வேண்டும் என்ற கருத்து இருதரப்பிலும் பிரதிபலித்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டொலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு இதுவரை இல்லாத அளவிற்கு வீழ்ச்சி!




டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இன்றைய தினம் 27 சதவீதம் குறைந்து இதுவரை இல்லாத அளவிற்கு 86.31 ரூபாயாக வீழ்ச்சியடைந்துள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு, தொடர்ந்து வெளியேறும் வெளிநாட்டு மூலதனம் மற்றும் உள்நாட்டு பங்குச் சந்தையில் வெளிப்படும் எதிர்மறையான போக்கு ஆகியவை இந்திய பண வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் வேலைவாய்ப்பு வளர்ச்சியால் சந்தையில் எதிர்பார்த்ததை விட டொலர் மதிப்பு வலுப்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

வங்கிகளுக்கு இடையிலான அந்நிய செலாவணி மாற்றத்தில், இன்று காலை வர்த்தகத்தில் டொலருக்கு இணையான இந்திய ரூபாய் 86.12 ஆக தொடங்கியது. பின்னர் 27 சதம் சரிந்து 86.31 ரூபாய இருந்தது. இது நேற்றைய நாள் வர்த்தக முடிவில் இருந்து குறைவாகும்.

# முகக்கவசம் அணியாவிட்டால் பெற்றோல் கிடையாது உத்தரபிரதேச அரசு பிறப்பித்துள்ள அதிரடி உத்தரவு!




உத்தரபிரதேசத்தில் சாலை விபத்துகள் அதிகரித்து உள்ளதால் விபத்துகளை குறைக்க முகக்கவசம் அணியாவிட்டால் பெற்றோல் கிடையாது என்ற அதிரடி உத்தரவை உத்தரபிரதேச அரசு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் போக்குவரத்து கமிஷனர் பிரஜேஷ் நராயண் சிங் கடிதம் அனுப்பி உள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:-

சாலை பாதுகாப்பு தொடர்பாக இந்த மாத தொடக்கத்தில் முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் நடத்திய ஆய்வுக்கூட்டத்தில், விபத்துகள் அதிகரித்து வருவதும், ஆண்டுக்கு 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழப்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் பெரும்பாலானவர்கள் இருசக்கர வாகன ஓட்டுனர்கள் என்பதும், முகக்கவசம் அண ியாததால் இந்த உயிரிழப்புகள் நடைபெறுவதும் கண்டறியப்பட்டது.

எனவே இருசக்கர வாகன ஓட்டுனர்கள் முகக்கவசம் அணிவதை கட்டாய மாக்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்த கொள்கை ஏற்கனவே கௌதம புத்த நகர் மாவட்டத்தில் கடந்த 2019ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் அவ்வப்போது கடைப்பிடிக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது. எனவே இந்த கொள்கையை அனைத்து மாவட்டங்களும் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும். இதை மாவட்ட கலெக்டர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இந்த விவகாரத்தில் மோட்டார் வாகன சட்டம் 1988-ன் கீழ் பெற்றோல் விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். மேலும் பொலிஸ் மற்றும் ஆர்.டி.ஓ.க்கள் இணைந்து இந்த கொள்கை வெற்றி பெறுவதை உறுதி செய்ய வேண்டும். இது தொடர்பாக சமூக வலைத் தளங்கள், ஊடகங்கள் உள்ளிட்ட தளங்கள் மூலம் விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# டொனால்ட் டிரம்ப் பதவியேற்பு விழா: வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் பங்கேற்பு!

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற குடியரசு கட்சியின் டொனால்டு டிரம்ப் எதிர்வரும் 20-ஆம் திகதி அமெரிக்காவின் 47-வது அதிபராக பதவியேற்க உள்ள நிலையில் இந்திய வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் இதில் கலந்து கொள்ள்ளவுள்ளார்.

டொனால்ட் டிரம்ப்-வான்ஸ் பதவியேற்பு குழுவின் அழைப்பின் அடிப்படையில் இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் பங்கேற்பார் என இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

பதவிக் காலம் முடிவடையும் அதிபர் ஜோ பைடன் விழாவில் கலந்துகொண்டு அதிகாரத்தை அவரிடம் ஒப்படைப்பார். பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட பிறகு டிரம்ப் உரையாற்றுவார். இந்த விழாவில் பல்வேறு நாட்டு தலைவர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

பதவியேற்பு விழா முடிந்ததும் புது நிர்வாகத்தினரைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஜெய்சங்கர் ஆலோசனை நடத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரே நாடு, ஒரே தேர்தல்: மாதிரி நடத்தை விதிமுறைகள் முக்கியமானது என்கிறது தேர்தல் ஆணையம்!




நாடு முழுவதும் நாடாளுமன்றம் , சட்ட சபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாவை மத்திய அரசு தாக்கல் செய்தது.

இந்த திட்டத்தை கொண்டு வருவதற்கு மத்திய அரசு பல்வேறு காரணங்களை கூறி வருகிறது.

அடிக்கடி தேர்தல் நடத்துவதால் செலவு அதிகரிக்கிறது. நேரம் வீணாகிறது. அடிக்கடி நடக்கும் தேர்தல்களுக்கு தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்படுவதால் வளர்ச்சி திட்டங்கள் முடங்குகின்றன. சேவைகளின் செயல்பாடு பாதிக்கப்படுகிறது. அதிகாரிகள் நீண்ட காலத்துக்கு தேர்தல் பணிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். மொத்தத்தில் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என மத்திய அரசு கூறி வருகிறது.

ஆனால், தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் தொடர்பான மத்திய அரசின் கருத்துடன் தேர்தல் ஆணையம் முரண்படுகிறது. நடத்தை விதிமுறைகள் தொடர்பான சட்ட ஆணையத்தின் கேள்விக்கு தேர்தல் ஆணையம் பதில் அளிக்கையில் தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் அமுலாக்கத்தை இடையூறாக பார்ப்பது சரியல்ல. அது, தேர்தல் பிரசாரத்தின்போது அனைத்து தரப்பினருக்கும் சமமாக போட்டியிடும் வாய்ப்பை உருவாக்குவதற்கான முக்கிய கருவி ஆகும். அத்துடன் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி அந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சுதந்திரமான, நேர்மையான தேர்தல் நடத்த அவை அவசியம். தேர்தல் திகதி அறிவிப்பு முதல், தேர்தல் பணிகள் முடிவடையும்வரை குறைவான காலத்துக்குத்தான் நடத்தை விதிமுறை அமுல்படுத்தப்படுகிறது. ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவை ஆய்வு செய்யும் நாடாளுமன்ற கூட்டுக்குழுவிடம் தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்ப்ப காலக் கடினங்களை ஏன் யாரும் பேசுவதில்லை?



## நடிகை ராதிகா ஆப்தேயின் இன்ஸ்டா பதிவு,கர்ப்ப கால உன்னத ஒளியின் மீதான சாட்டையடி

பூப்பெய்தல், தாய்மை அடைதல் என ஒரு பெண் வாழ்வில் உடல் சார்ந்து நிகழும் மாற்றங்களுக்கு சடங்குகளும், சம்பிரதாயங்களும் செய்து அதன் மீது தீட்டென்றும், புனிதமென்றும் கற்பிதங்கள் கற்பிக்கும் சமூகத்தில்தான் நாம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முற்போக்கு பேசும் ஊடகங்கள் கூட எங்கோ ஒரு கிராமத்தில் பூப்புனித நீராட்டு விழா, திருமணத்துக்கு செய்யப்படும் பிரம்மாண்ட சீர் வரிசைகள் பற்றிய செய்தியை ஒளிபரப்பி அறிந்தோ அறியாமலோ பெண்ணடிமைத் தனத்தை ஊக்குவித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இவை போதாதென்று செல்லப் பிராணிகளுக்கும் மஞ்சள் நீராட்டு விழாவும், வளைகாப்பு நடத்தி ரீல்ஸ் போடும் அளவில் தான் சமூகம் இருக்கிறது. கற்பு, பெண் உடல் மீது கட்டமைக்கப்பட்ட புனித பிம்பங்கள், மாதவிடாய் தொடர்பான கட்டுக்கதைகள் ஆகியனவற்றின் மீதான ஆரோக்கிய விவாதங்களும் இல்லாமல் இல்லை. அதேவேளையில் தாய்மை அடைதல் மீதான பார்வை மீதும் கவனம் தேவை என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார் திரைப் பிரபலம் ஒருவர். சவாலான கதைகளை, கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடிக்கும், எதிலும் சற்று வித்தியாசமான பார்வையை முன்வைப்பவர் நடிகை ராதிகா ஆப்தே.

ராதிகா ஆப்தேவின் பதிவில் - “நான் இந்த ஃபோட்டோஷூட்டை குழந்தை பிறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக நடத்தினேன். உண்மை என்னவென்றால், கர்ப்ப காலத்தில் இருந்த என் உடல் தோற்றத்தை உள்ளபடியே ஏற்றுக்கொள்ள நான் போராடினேன். ஏனெனில், அதற்கு முன்னதாக என்னை நானே அவ்வளவு பருமனாகப் பார் த்ததில்லை. என் உடல் வீங்கிப் போய் இருந்தது. எனது இடுப்பு எலும்புப் பகுதியில் கடுமையான வலி இருந்தது. தூக்கமின்மையால் நான் பட்ட அவதி கர்ப்ப காலம் மீதான என் பார்வையையே மாற்றியது.

இப்போது குழந்தை பிறந்து இரண்டே வாரங்கள் தான் ஆகின்றன, இப்போது என் உடல் இன்னும் வேறு மாதிரியாக இருக்கிறது. புதிய சவால்கள், புதிய கண்டுபிடிப்புகள், புதிய பார்வைகள் உதித்துள்ளன. இந்தத் தருணத்தில், என் கர்ப்பா காலப் புகைப்படங்களை எல்லாம் கனிவோடு அணுகுகிறேன். என் மீதே நான் கடினமாக நடந்து கொண்டதற்காக வருத்தப்படுகிறேன். இப்போது என்னால் அந்த மாற்றங்களில் இருந்த அழகைக் காண முடிகிறது. இந்தப் புகைப்படங்களை நிச்சயமாக என் காலம் முழுவதும் நான் பத்திரப்படுத்துவேன்.

எனக்குத் தெரிந்து நிறையப் பெண்கள் கடினமான கர்ப்ப காலத்தைக் கடந்திருக்கின்றனர். உண்மையில், இது மாதவிடாய் காலத்தில் மெனோபாஸை எதிர்கொள்வதற்கு இணையானது. கர்ப்ப கால ஹோர்மோன்களை லேசாக எண்ணிவிடக் கூடாது. நாம் எல்லோரும் மாதவிடாய் பற்றியும், மெனோபாஸ் பற்றியும் பேசுகிறோம். ஆனால் கர்ப்ப காலத்தின் மீது மட்டும் உன்னத ஒளி பாய்ச்சுகிறோம். குழந்தையைப் பெற்றெடுத்தல் என்பது நிச்சயமாக அற்புதமானதுதான். ஆனால் கர்ப்ப காலத்தின் கடினங்களைப் பற்றி ஏன் யாரும் பேசுவதில்லை? இது எனக்கு முட்டாள்தனமானத் தெரிகிறது” என்று கூறியிருக்கிறார்.

ராதிகா ஆப்தேவின் இந்தப் பதிவை வாசிக்கும் போதே சமீபத்தில் 'வெஜைனல் பெர்த்' (Vaginal Birth) மூலம் தாயான பெண் ஒருவர் சமூக வலைதளத்தில் எழுப்பிய கேள்விகளையும் தொடர்புபடுத்திக் கொள்ள முடிந்தது, “சுகப் பிரசவம் என்று இதற்குப் பெயர் வைத்தது யார்? எந்த விதத்தில் இது சுகமான பிரசவமாக இருக்கிறது என்று அந்தப் பெயரை வைத்தார்கள். பிரசவ வலி மிகக் கொடூரமாக இருந்தது. சிசேரியனுக்கு இந்த வலி எவ்விதத்திலும் குறைவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

குழந்தை சற்றே பெரிதாக இருந்தால் வெளியே வர பிறப்புறப்பில் சிறிய கீறல் போட்டு பின்னர் தையல் வேறு போடுகிறார்கள். அந்தத் தையலால் ஏற்படும் வலியைச் சொல்ல முடியாது. இவ்வளவு கொடுமைகள் இருக்கும்போது அதை ‘சுகப் பிரசவம் தான ஏன் அலட்டிக்குற?’ என்று கேட்போர்களை என்ன செய்யலாம். இதை சுகப் பிரசவம் என்று சொல்லாதீர்கள். அறுவை சிகிச்சை இல்லாமல் இயற்கையான முறையில் குழந்தை பெறுதல் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள்” என்று அனுபவத்தைப் பகிர்ந்திருந்தார்.

ராதிகாவின் பதிவு, இந்தப் பெண்ணின் பகிர்வும் சரி இரண்டுமே கர்ப்ப காலத்தின், பிரசவத்தின் மீதான உன்னத ஒளியின் மீதான சாட்டையடிதான். பிரசவ காலத்தில் ஒவ்வொரு பெண்ணுக்கும் உடலில் வெவ்வேறு விதமான தாக்கங்கள் இருக்கலாம், சிலருக்கு வாந்தி, குமட்டல் இருக்கலாம். சிலருக்கு சில ஒவ்வாமை ஏற்படலாம். சிலருக்கு காரணமே இல்லாமல் மனச்சோர்வு ஏற்படலாம். இவை எல்லாவற்றையும் மருத்துவ உலக இயல்பானதே எனக் கூறுகிறது.

கர்ப்பிணிப் பெண்களின் ஆரோக்கியமான மனநலம் பெரும்பாலும் புறக்கணிக்கப்படக் கூடாது. அது பிறக்கும் குழந்தைக்கு மனநலப் பிரச்சினைகள், கவனம் செலுத்துதலில் பிரச்சினை, பெற்றோர் கூறுவதைக் கவனிக்காத தன்மை, அதீத செயற்பாட்டுக் கோளாறு, அறிவாற்றல் வளர்ச்சி பலவீனமடைதல் போன்றவற்றை ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது என்று எச்சரிக்கின்றனர். சில மருத்துவர்கள் கர்ப்பிணியோடு, அவரின் கணவர், மாமியார் என எல்லோரையும் தெரபிகளுக்குப் பரிந்துரைக்கின்றனர்.

இதனால் இப்போதெல்லாம் ஓரளவுக்கு பெண்கள் கர்ப்ப காலத்தில் அவரவர் வசதிக்கு, விருப்பத்துக்கு ஏற்ப உடற்பயிற்சிகள், யோகா, தெரபி என செல்கின்றனர். சிலர் தனித்துவமாக ஊட்டச்சத்து நிபுணரையும் பணியமர்த்திக் கொள்கிறார்கள். கர்ப்ப காலம் பெண்ணின் சுமை அல்ல, குடும்பம் முழுவதும் சேர்ந்து கடக்க வேண்டிய காலம் என்பது தான் இதன் அர்த்தம். ஒருவகையில் “கோ பேரன்டிங்” என்பது பாலின சமத்துவம். அது குழந்தை பிறப்பதற்கு முன்பிருந்தே தொடங்குவது தான் சிறந்த நடைமுறையாக இருக்க முடியும்.

ஆனால், இவற்றையெல்லாம் குடும்பத்தினரும், சுற்றத்தினரும் விமர்சிக்கும் விதம் அநாகரிகமானது. “அந்தக் காலத்தில் நாங்களெல்லாம் வயகாட்டில் வேலை பார்க்கும்போதே பிள்ளைய பெத்துப்போம்” என்ற கதையில் ஆரம்பித்து “அலட்டிகுறா” என்ற விமர்சனங்கள் வரை கொண்டு வருவர்.

அத்தகையோருக்கு தான் ராதிகா ஆப்தேவின் இன்ஸ்டா போஸ்ட் மிக முக்கிய கேள்வியை முன்வைக்கிறது. “கர்ப்ப காலத்தின் கடினங்களைப் பற்றி ஏன் யாரும் பேசுவதில்லை?!இது எனக்கு முட்டாள்தனமானத் தெரிகிறது” என்று அவர் பதிவிட்டுள்ளார்.

### போஸ்ட் பார்டம் டிப்ரஷன் (Post Partum Depression)

குழந்தையை சுமக்கும்போதும், குழந்தைப் பேறுக்குப் பின்னரும் பெண்ணின் உடலில் பெரியளவில் மாற்றங்கள் எற்படும். உடலில் மட்டுமல்ல மனதளவிலும் பெரிய அழுத்தங்கள் ஏற்படும். எப்போதும் குழந்தையை மட்டுமே கவனித்துக் கொள்ள நேரிடுவதால் நான் யார்? நான் இதற்காகத் தான் இருக்கிறேனா? என்ற கேள்விகள் எழும். குடும்பத்தினர் அனைவரின் கவனமும் புதிய வரவான குழந்தையின் மீது மட்டுமே இருக்க தன்னை குழந்தைப் பேறுக்கான இயந்திரமாக பாவித்துதான் அனைவருமே பழகினார்களா என்ற கோவம் வரும்.

பிரசவித்த தாய்க்கு உணவு கொடுக்கும்போது கூட, இதை சாப்பிட்டால் குழந்தைக்கு நல்லது, இதைச் சாபபிட்டால் பால் ஊறும், இதைச் சாப்பிட்டால் குழந்தைக்கு ஆகாது என்று சொல்வார்கள். உடல் ரீதியாக சில விஷயங்கள் சரியென்றாலும் கூட குழந்தைக்காக, குழந்தைகாக என்ற “ரிபீட் மோட்” போதனைகள் அழுத்தத்தை ஏற்படுத்தும். பெரும்பாலான பெண்கள் இதிலிருந்து தங்களை மீள் கட்டமைப்பு செய்து கொள்கிறார்கள் என்றாலும் கூட. அந்த மீள் கட்டமைப்பு சுமையை ஒட்டுமொத்தமாக பெண்களுக்குக் கடத்தாமல் குடும்பத்தினர் அனைவரும் பங்கேற்க வேண்டும். அதற்கான அறைகூவல் தான் ராதிகாவின் பகிர்வு.

பெண் சிசு கொலைத் தடுப்பது தொடங்கி மாதவிடாய் கட்டுக்கதைகளை தகர்த்தல், பெண் கல்வி, பாலின சமத்துவம், இணையைத் தேடும் உரிமை, பணியிடத்தில் ஒரே மாதிரியான வேலைக்கு ஒரே மாதிரியான ஊதியத்தைப் பெறுதல், ஆடை சுதந்திரம், தனித்து வாழும் சுதந்திரம், குழந்தை பெற்றுக் கொள்வதில் முடிவெடுக்கும் உரிமை எனப் பல விஷயங்களில் பெண்கள் நலனுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது. அதில் புத்தொளி பாய்ச்சப்பட்டிருக்கும் கர்ப்ப கால கடினங்களைப் பற்றியும் இனி பொது வெளியில் அதிகம் பேசினால் அதன் மீது பொதுபுத்தியில் படிந்துள்ள பார்வைகளை மாற்றுவதோடு தீர்வுகளையும் காணலாம்.

> “ராதிகா ஆப்தேவின் பதிவில் – “நான் இந்த ஃபோட்டோஷூட்டை குழந்தை பிறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக நடத்தினேன். உண்மை என்னவென்றால், கர்ப்ப காலத்தில் இருந்த என் உடல் தோற்றத்தை உள்ளபடியே ஏற்றுக்கிகாள்ள நான் போராடினேன். ஏனெனில், அதற்கு முன்ன தாக என்னை நானே அவ்வளவு பருமனாகப் பார்த்ததில்லை. என் உடல் வீங்கிப் போய் இருந்தது. எனது இடுப்பு எலும்புப் பகுதியில் கடுமையான வலி இருந்தது. தூக்கமின்மையால் நான் பட்ட அவதி கர்ப்ப காலம் மீதான என் பார்வையையே மாற்றியது.”

# பங்களாதேசில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை அரசியல் ரீதியானது – அரசு அறிக்கை






வங்கதேசத்தில் இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை, அரசியல் ரீதியானது என்றும் மதவாத ரீதியானது அல்ல என்று யூனுஸ் அரசு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பங்களாதேசில் மாணவர்கள் போராட்டத்தால் ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. தொடர்ந்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்றது.

இதனால் அப்பகுதி மக்கள் தொகையில் 7.65 சதவீதம் உள்ள இந்து சிறுபான்மையினர் மீது தொடர் தாக்குதல்கள் நடைபெற தொடங்கியது.

இந்துக்களின் கோவில்கள் தாக்கப்பட்டன. துர்கா பூஜையின்போது இந்த சம்பவங்கள் அதிகம் அரங்கேறின. இந்தியா உள்ளிட்ட நாடுகள் இந்துக்கள் மீதான வன்முறைக்கு கடும் கண்டனம் தெரிவித்தது.

இதற்கிடையே இந்துக்களின் போராட்டத்தைத் தூண்டியதாக இஸ்கான் மத அமைப்பை சேர்ந்த சின்மோய் கிருஷ்ணதாஸ் கைது செய்யப்பட்டார்.

அதில், கடந்த ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் திகதி முதல் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்று வருவதாக பொலிஸார் அறிக்கையில் மேற்கோள் கட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த தாக்குதல்களில் பல 'வகுப்புவாத ரீதியானவை' என்பதை அரசு ஒப்புக்கொண்டாலும் பெரும்பாலான தாக்குதல்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்றே கூறப்பட்டுள்ளது.

மொத்த வன்முறை சம்பவங்களில், 1769 தாகுதல் மற்றும் நாசவேலை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அறிக்கை கூறுகிறது.

கூற்றுக்களின் அடிப்படையில் இதுவரை 62 வழக்குகளில் விசாரணையின் அடிப்படையில் குறைந்தது 35 குற்றவாளிகளை கைது செய்துள்ளனர்.

எவ்வாறாயினும், இதில் 1,234 சம்பவங்கள் அரசியல் காரணங்களுக்காகவே நடந்துள்ளன அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

ஆகஸ்ட் 5 ஆம் திகதி முதல் ஜனவரி 8ஆம் திகதி , 2025 வரை 134 வகுப்புவாத வன்முறை சம்பவங்களை பொலிஸார் கண்டறிந்துள்ளனர். இதில் 53 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 65 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

வகுப்புவாத வன்முறை தொடர்பான புகார்களை நேரடியாகப் பெறவும், சிறுபான்மை சமூகத்தினருடன் தொடர்பைப் பேணவும் காவல்துறை வாட்ஸ்அப் எண்ணையும் வெளியிட்டுள்ளது.

வகுப்புவாத வன்முறைகளில் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் ஏற்கெனவே உத்தரவிடப்பட்டுள்ளது என்று அரசு கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டிரம்பின் வரி மிரட்டல் தீங்கு விளைவிக்கும் அமெரிக்கர்களுக்கு வலியுறுத்திய ஜஸ்டின் ட்ரூடோ!



கனடா பிரதமர் பதவியை இராஜினாமா செய்துள்ள ஜஸ்டின் ட்ரூடோ, டிரம்பின் வரி மிரட்டல் தீங்கு என்பதை அமெரிக்க மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்டு டிரம்ப் கனடாவில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25 சதவீதம் கூடுதல் வரி விதிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்காவின் 51- வது மாகாணமாக கனடா இணைய வேண்டும் என டொனால்டு டிரம்ப் தொடர்ந்து தெரிவித்து வருகிறார்.

இந்த நிலையில் இது தொடர்பாக ஜஸ்டின் ட்ரூடோ கூறுகையில் அமெரிக்காவின் 51-வது மாகாணமாக கனடா இணைய வேண்டும் என்கிறார். இது நடக்கப்போவதில்லை. கனடாவில் இருந்து வரும் மின்சாரம் அல்லது எண்ணெய்க்கு 25 சதவீதம் கூடுதல் வரி என்பதை எந்த அமெரிக்கரும் விரும்பமாட்டார்கள். இது தொடர்பாக அமெரிக்க மக்கள் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். அனைத்து அமெரிக்க மக்களின் வாழ்க்கையையும் எளிதாக்குவதற்காக டிரம்ப் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அதற்கான முயற்சியை அவர் செய்ய வேண்டும். அனைத்து அமெரிக்க ஊழியர்களுக்கும் ஆதரவாக இருக்க வேண்டும். வரி உயர்வு போன்ற விடயங்கள் அவர்ளை தீங்கு விளைவிக்க போகிறது என ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடாவிடம் இருந்து எண்ணெய் அல்லது எந்தவொரு பொருட்களும் அமெரிக்காவுக்கு தேவையில்லை. ஆனால், அமெரிக்கா பயன்படுத்தும் நான்கில் ஒரு பங்கு எண்ணெய் கனடாவில் இருந்து வருகிறது. அல்பெர்ட்டா மாகாணம் அமெரிக்காவுக்கு தினசரி 4.3 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய்களை ஏற்றுமதி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போப் பிரான்சிசுக்கு அமெரிக்காவின் உயர்ந்த விருதினை வழங்கிய அதிபர் ஜோ பைடன்!



முன்னாள் அதிபர் ஜோ பைடன் அமெரிக்க அதிபரின் ஆக உயரிய மெடல் ஆப் பிரீடம் உயரிய விருதை போப் பிரானசிசுக்கு வழங்கினார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற குடியரசு கட்சியின் டொனால்டு டிரம்ப் வரும் 20ஆம் திகதி அமெரிக்காவின் 47-வது அதிபராக பதவியேற்க உள்ளார். அந்நாட்டு மேல் நீதிமன்றத்தின் கோர்ட் தலைமை நீதிபதி அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார். பதவிக் காலம் முடிவடையும் அதிபர் ஜோ பைடன் விழாவில் கலந்துகொண்டு அதிகாரத்தை அவரிடம் ஒப்படைக்கிறார். இந்த விழாவில் பல்வேறு நாட்டு தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இதற்கிடையே, அதிபர் பதவியில் ஒரு வார காலம் மீதமுள்ள நிலையில் கடைசி வெளிநாட்டுப் பயணமாக இத்தாலி செல்ல திட்டமிட்டிருந்தார். ஆனால் கலிபோர்னியா காட்டுத்தீ எதிரொலியாக அதிபர் பைடனின் இத்தாலி பயணம் இரத்துசெய்யப்பட்டது.

இந்நிலையில் தான் , அமெரிக்க அதிபரின் ஆக உயரிய மெடல் ஆப் பிரீடம் விருது போப் பிரான்சிசுக்கு வழங்கப்பட்டது. அதிபர் ஜோ பைடன் முதல் முறையாக அந்த உயரிய விருதை வழங்கினார்.

போப் பிரான்சிசிடம் தொலைபேசியில் பேசிய அதிபர் பைடன் இந்த விருதை வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், ஏழை மக்களுக்கு சேவையாற்றிய போப் பிரான்சிஸின் அர்ப்பணிப்பை பாராட்டினார்.

இதுதொடர்பாக, அதிபர் பைடன் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட செய்தியில், உங்கள் பணிவையும் பண்பையும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. நீங்கள் காட்டும் அன்புக்கு ஈடு இணை இல்லை என பதிவிட்டுள்ளார். அமெரிக்காவின் வளர்ச்சி, பண்புகள், பாதுகாப்பு, உலக அமைதி போன்றவற்றில் சிறந்த பங்காற்றியவர்களுக்கு அதிபரின் மெடல் ஆப் பிரீடம் விருது வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆக அதிகரிப்பு!

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் தொடர்ந்து பரவி வரும் காட்டுத் தீயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஈட்டன் பகுதியில் 11 பேரும், பாலிசேட்ஸ் பகுதியில் 5 பேரும் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காட்டுத் தீ ஏற்பட்டுள்ள பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிப்பதால் தீயை அணைப்பதில் சிக்கல் நீடிக்கிறது. பள்ளத்தாக்கு பகுதிகளில் தீயை அணைக்க வீரர்கள் போராடிக் கொண்டிருந்தபோது விமானம் மூலம் வானில் இருந்து தீ தடுப்பு மருந்து வீசப்பட்டது.

இது குறித்து ஃபெடரல் அவசர கால மேலாண்மை ஆணைய தலைவர் கூறும் போது, “காட்டுத் தீ ஏற்பட்டுள்ள பகுதிகளில் காற்றின் வேகம் அபாயகரமாகவும், தீவிரமாகவும் மாறியுள்ளது. இதில் மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய மிகப்பெரிய விஷயம் இது இன்னும் அதி பயங்கரமாக இருப்பது தான்,” என்றார். முன்னதாக காட்டுத் தீ ஏற்பட்டுள்ள பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 80 கிலோமீட்டர்கள் வேகத்திற்கு வீசக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு கூறியுள்ளார். "தற்போதைய அரசு நாட்டு மக்களுக்காக செயற்பட்டு வருகின்றது. மக்களின் தேவைகளே நிறைவேற்றப்பட்டுவருகின்றன. எனவே, அவர்கள் இணைந்தால்கூட அரசின் பயணத்துக்கு தாக்கமாக அமையப்போவதில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்கு வைத்து க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வில்லை. தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை தேசிய தேர்தல் ஆணைக்குழு நடத்தும்." -என்றார்.

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் ஆராய்ந்து தீர்க்கமான முடிவை அறிவிப்போம்.

அதைவிடுத்து ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் தீர்வு தொடர்பில் தெரிவிக்கும் வெவ்வேறு விதமான கருத்துக்களுக்கு எம்மால் பதில் கூற முடியாது.

அண்மையில் சிறீதரன் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்து தீர்வு விடயம் தொடர்பில் தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவித்தார்கள். இதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்காமல் வாய்க்கு வந்த மாதிரி தீர்வு விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து வருகின்றார்கள்.

முதலில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை வேண்டும். தீர்வு விடயம் தொடர்பில் அவர்கள் பொதுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். வெளியில் இருந்துகொண்டு அரசை விமர்சிப்பதால் எந்தப் பயனும் இல்லை.

புதிய அரசமைப்பில் அரசியல் தீர்வு உறுதி. இது எமது தேர்தல் கால வாக்குறுதி. இதை நிறைவேற்றியே தீருவோம்." - என்றார்.

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்பட்டிருந்தன. இந்நிலையிலேயே இன்று காலை கண்டுபிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளார். மாணவியும் மீட்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்த மாணவி உறவினரால் கடத்தப்பட்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கையெழுத்துப் போராட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

கையெழுத்துகள் திரட்டப்பட்ட பின்னர், அவை அடங்கிய மனு ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்துக்கிடமான இரண்டு இளைஞர்களைப் பொலிஸார் நேற்று இரவு சோதனையிட்டபோது , அவர்களிடம் இருந்து 200 போதை மாத்திரைகளைப் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

அதனையடுத்து இரண்டு இளைஞர்களையும் கைது செய்த பொலிஸார், அவர்களைச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து முன்னெடுத்துள்ளனர்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கின்றார்.

# பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறக்கத் தீர்மானம்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு







"இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தைவிலை கிடைக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறப்பதற்கு திட்டமிட்டு வருகின்றோம்." - என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மறவன்புலோ கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில்,

"தற்போதைய காலநிலை மாற்றம் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கின்றது. முன்னைய காலங்களில் நெல் அறுவடையின்போது மழை பெய்வதில்லை. ஆனால், இப்போது மழையின் பாதிப்பை நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சில நாள்களுக்குள் கடும் மழை பெய்தபோதும் தெய்வாதீனமாக மிகப் பெரியளவு நெல் அழிவு ஏற்படவில்லை. அந்த மழை மற்றும் இப்போதும் பெய்யும் மழை என்பனவற்றால் உங்களின் வயல் நிலங்கள் ஈரலிப்பாக உள்ளன. எனவே இதை விவசாயிகள் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

நெல் அறுவடை முடிந்த பின்னர் சிறுதானியங்களை பயிரிடுங்கள். அதற்கான விதைகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், பிரதம செயலர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களும் குளத்தை நம்பி இருபோகத்தை மேற்கொள்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை என்பது வான்பார்த்த பயிராகவே உள்ளது. மழையை நம்பி ஒருபோகம் மாத்திரமே செய்கின்றோம். எனவே, தற்போதுள்ள காலநிலையின் மாற்றத்தைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர்செய்கையில் ஈடுபட்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவேண்டும்.

எமது மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், எந்தப் பயிரை உற்பத்தி செய்தால் ஏற்றுமதி செய்யலாம் என்பதையும் ஆராய்ந்து அதற்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டும். அதற்கு விவசாயத் திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றைய தினம் நெல் அறுவடையுடன் சேர்த்து மூத்த விவசாயிகளை கௌரவித்திருந்தீர்கள். அதற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இன்று இளையோர் விவசாயத்தில் நாட்டம் குறைந்தவர்களாக மாறிவிட்டார்கள். வெளிநாட்டு மோகத்தில் அவர்கள் சிக்கியிருக்கின்றார்கள். அங்கு சென்ற பலர் இப்போது நாட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் இளையோர்கள் விவசாயத்தில் இறங்கினால் நாம் உற்பத்தியில் சிறப்பான இடத்தைப்பெற முடியும்.

வடக்கு மாகாணத்தில் என்ன வளம் இல்லை? இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்திலுள்ளதுபோன்று வளங்கள் ஏனைய மாகாணங்களில் இல்லை. ஆனால் அதை உரிய வகையில் நாங்கள் பயன்படுத்தத் தவறியிருக்கின்றோம்.

விவசாயமும், கடற்றொழிலும் எமது மாகாணத்தின் முக்கியமான பொருளாதாரத் தூண்கள். அவை இரண்டையும் சார்ந்த தொழிற்சாலைகள் எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் உருவாக் கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த உற்பத்திப்பொருட்களை பெறுமதி சேர் பொருட்களாகவும் மாற்றியமைக்க முடியும்." - என்றார்.

பிரதம செயலர் இ.இளங்கோவன் தனது உரையில்,

"30 ஆண்டுகளின் பின்னர் இடம்பெற்ற நெல் அறுவடை விழாவை பாராட்டியதுடன் நகரமயமாதல் நிகழும் இந்தச் சூழலிலும் மறவன்புலோவில் கிராமத்தின் வாசம் வீசுகின்றது." - என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி பிரணவன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக கைதடி பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.கபில்ராஜ்ம் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்கள், ஊரவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

---

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன பிரதமர் லி கியாங் மற்றும் இராஜதந்திரிகளைச் சந்திக்கவுள்ளார்.

அத்தோடு இந்த விஜயத்தின்போது, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட துறைசார் பல கள விஜயங்களிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதோடு பல உயர்மட்ட வர்த்தகக் கூட்டங்களிலும் பங்கேற்கத் திட்டமிடப்பட்டுள்ளார்.

இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இந்த விஜயம் மிக முக்கியமான முன்னெடுப்பாகக் கருதப்படுகின்றது. இதன் ஊடாக இரு தரப்பு பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


நெய்தல் கடற்கரை நகர்
Neithal Beach City
மற்றும்
யாழ்ப்பாணம் றொட்டரிக் கழகம்
Rotary Club Of Jaffna
இணைந்து நடாத்தும்
மாபெரும் பொங்கல் திருவிழா
திகதி :- 15.01.2025 (புதன்கிழமை)
நேரம் :- மாலை 03.30 மணிமுதல்
இடம் :- நெய்தல் கடற்கரைநகர் நாவற்குழி,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :- 0777 27 68 18
ஊடக அனுசரணை:-
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைக்கதிர்
Maalaikkathir
தமிழர் பொருண்மியம் வாரமலர்
TAMILS ECONOMY


நெய்தல் கடற்கரை நகர்
Neithal Beach City
மற்றும்
யாழ்ப்பாணம் றொட்டரிக் கழகம்
Rotary Club Of Jaffna
இணைந்து நடாத்தும்
மாபெரும் பொங்கல் திருவிழா
நிகழ்ச்சிகள்
மாட்டுப்பொங்கல்
சிறுதானியப் பொங்கல்
புறாப்போட்டி
மயிலாட்டம்
பொம்மலாட்டம்
பொய்க்கால் குதிரை
சமூகசேவை செயற்திட்டம்
பாரம்பரிய விளையாட்டுக்கள்
மேலும் பல பொழுதுபோக்கு நிகழ்வுகள்
அனைவரும் வாரீர்! ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம்
ஊடக அனுசரணை:-
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைக்கதிர்
Maalaikkathir
தமிழர் பொருண்மியம் வாரமலர்
TAMILS ECONOMY







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.01.2025 இல் வெளியிடப்பெற்றது.